

வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு, நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (11.12.2024) கேரள மாநிலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கேரள மாநிலக் கழக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் செண்டை மேளம் முழங்க கழகத்தினரும், பொதுமக்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.12.2024) சென்னையில் நடைபெற்ற நடிகர் ஜெயராமனின் மகன் நடிகர் காளிதாஸ் ஜெயராம் – தாரிணி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

# மதுரை ‘டங்ஸ்டன்’ கனிமச் சுரங்க உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்!

## நாடாளுமன்றத்தில் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 13–

மதுரை நாயக்கர்பட்டி கிராமத்தில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைக்க தமிழ்நாடு அரசின் எதிர்ப்பை மீறி ஒன்றிய அரசு உரிமம் வழங்கியுள்ளது. இதனை கண்டித்தும், உரிமத்தை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தியும் சட்டப்பேரவையில்



ஒருமனதாக கடந்த ஒன்பதாம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அன்றைய தினமே ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்தது. இந்நிலையில் மதுரையில் டங்ஸ்டன் கனிம சுரங்க உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் தி.மு.க. வலியுறுத்தப்பட்டது. மக்களவையில் பேசிய மக்களவை குழு தி.மு.க. தலைவர் டி.ஆர். பாலு, டங்ஸ்டன் கனிம சுரங்கத்திற்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், இந்த தீர்மானத்தை ஏற்று சுரங்க உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

### துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! கரூர் முரளி – இம்ரான் – ஆட்லின் சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச.13 –

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையில் 8.12.2014 அன்று மாலை 5 மணியளவில், கீழ வீதி, ஆவுடையார் கோவிலில் நடைபெற்றது.

தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கரூர் முரளி, இம்ரான், ஆட்லின் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றியச் செயலாளர் உதயம் சண்முகம், ஆவுடையார் கோவில் தெற்கு ஒன்றியச் செயலாளர் வே.பொன் துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் கழக தீர்மானக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி. ராமநாதன், மாவட்ட துணைச் செயலாளர் க.அடைக்கலம், உதயம் தாஹீர், ஒன்றியச் செயலாளர்கள் பொன்.கணேசன், சக்தி ராமசாமி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் தி.முத்து, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஹரி விமலாதி,

ஒன்றிய துணைச் செயலாளர்கள் சி.மாணிக்கம், செ.மதியழகன், வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் மு. இந்திரா, கரு.செந்தில் குமரன், ஆர். பாண்டியன், மா.கருப்பையா, பி. சாத்தையா, கா.சேவுகப்பெருமாள், மு.அல்லி முத்து, நாகராஜ், வீரசேகர், கே.வேலுச்சாமி, பி.ஜகுபர், உதயம் சரண், அய்யா ரமேஷ், செந்தில் வேல், கே.அண்ணாத்துரை, கே.ஆர். கே.சுரேஷ், எஸ்.எஸ்.காளீஸ்வரன், கே. சுப்பிரமணியன், வி.மதியழகன், ஜெ.சித்திக், சி.ராமச்சந்திரன், பாலகிருஷ்ணன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் ஆவுடையார் கோயில் வி.மாணிக்கவாசகம் நன்றி கூறினார்.

கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

### துணை முதல்வர் பிறந்தநாள் – அரசின் சாதனைகளை விளக்கி

# செந்துறை வடக்கு ஒன்றியம் சார்பில் தெருமுனைக் கூட்டம்!

## ஓசூர் பாரி – முத்துப்பாண்டி சிறப்புரை!

அரியலூர், டிச. 13 –

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறை வடக்கு ஒன்றியக் கழகம் சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மருவத்தூர், சேடக்குடிக்காடு கிராமங்களில் மாவட்டச் செயலாளர், போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் வி.எழில்மாறன் தலைமை வகித்தார். ஒன்றிய அவைத்தலைவர் அன்பழகன் அனைவரையும் வரவேற்றார்.

நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஓசூர் பாரி, கழக இளம் பேச்சாளர் முத்துப்பாண்டி ஆகியோர் பங்கேற்று, விடியல் மகளிர் பேருந்து பயணம், நான் முதல்வன், தமிழ்புதல்வன், மகளிர் உரிமைத் தொகை, உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் பேராசிரியர் அருள், ஒன்றிய துணை செயலாளர்கள் ஆசை தம்பி, சத்யபாமா புலேந்திரன், துரை ரவி, ஒன்றிய பொருளாளர் நன்னன், மாவட்ட பிரதிநிதிகள் கோடி, சபாபதி, ஆறுமுகம், மாவட்ட விவசாய அணி தலைவர் சின்னதம்பி, மாவட்ட தொண்டரணி தலைவர் பி.ஆர். பாண்டியன், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் கலையரசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தமிழ்மாறன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சித்ரா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சித்திரன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் செல்வம் , ஒன்றிய தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இலக்கியா, ஒன்றிய மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் வித்யா பிச்சப்பிள்ளை, மருவத்தூர் கிளை செயலாளர் அருள்மணி வெற்றி, சிவா, ஸ்டாலின் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.




### திருவண்ணாமலை கார்த்திகை தீபம் – மலை மீது தீபம் ஏற்ற

# கொப்பரை, திரி, நெய் எடுத்துச் செல்லத் தேவைப்படும் மனித சக்தி மட்டுமே அனுமதிக்கப்படும்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச. 13–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (11.12.2024) ஆணையர் அலுவலகத்தில், தூத்துக்குடி மாவட்டம், தேரிக்குடியிருப்பு, கற்குவேல் அய்யனார் திருக்கோயிலில் உள்ள பெரியாண்டவருக்கு உபயதாரரால் 12 கிலோ கிராம் வெள்ளியில் உருவாக்கப்பட்டுள்ள வெள்ளிக் கவசத்தை திருக்கோயில் நிர்வாகத்திடம் வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பின், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில் களின் திருப்பணிகளுக்கு அதிகளவில் உபயதாரர்கள் முன்வந்து நன்கொடைகளை வழங்கி வருகிறார்கள். இன்றைய தினம் தூத்துக்குடி மாவட்டம், தேரிக் குடியிருப்பு, கற்குவேல் அய்யனார் திருக்கோயிலிலுள்ள பெரியாண்டவருக்கு 12 கிலோ வெள்ளி கவசத்தை ஆர்.ஆனந்தகுமார் என்ற உபயதாரர் வழங்கியுள்ளார். இதே போல் பாரிமுனை காளிகாம்பாள் திருக்கோயி லுக்கு புதிய வெள்ளித்தேர் செய்திட 210 கிலோ வெள்ளியையும், திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலுக்கு புதிய வெள்ளித்தேர் செய்திட 100 கிலோ வெள்ளியையும் உபயதாரர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் வைர கிரீடம் உபயதாரர்களால் வழங்கப்பட இருக்கின்றது. இப்படி இந்த ஆட்சி பொறுப்பேற்றபின், உபயதாரர்கள் மட்டும் ரூ.1,185 கோடியினை நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள்.

இதன்மூலம் 9,491 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் இதுவரை 2.350 திருக்கோயில் களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, ரூ.6,967 கோடி மதிப்பிலான 7,176 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அதேபோல் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்களை அளவீடு செய்திடும் வகையில் தனி வட்டாட்சியர்கள், நில அளவையர்கள் நியமனம் செய்யப்பட்டு 36 ரோவர் கருவிகளின் மூலம் 1,78,178 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும், மாநில குழுவால் 10,889 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பின் நிலுவையில் இருந்த வாடகை ரூ.900 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாமல் இருந்த பல மாற்று பொன் இனங்களை உருக்கி சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி தங்க முதலீட்டு திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டதன் மூலம் வட்டித் தொகையாக ரூ.5 கோடி 13 திருக்கோயில் களுக்கு கிடைக்கிறது. மேலும், பழனி, சமயபுரம் போன்ற 10 திருக்கோயில்களில் உள்ள சுமார் 700 கிலோ பலமாற்று பொன் இனங்கள் விரைவில் மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி முதலீடு செய்யப்படுவதின் மூலம் ரூ.10 கோடி வரை வட்டித்தொகை கிடைக்கும்.



மேலும், ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப் பட்ட சொத்துக்களை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட்டு வருவாய் ஈட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை தீபத் திருவிழாவையொட்டி மலை உச்சியின் மீது தீபம் ஏற்றும் நிகழ்வு எவ்விதத்திலும் தடைப்படக்கூடாது என்று முதல்வர் உத்தரவிட்டிருக்கின்றார். சமீபத்தில் பெய்த கனமழையின் காரணாமாக மலையில் ஏற்பட்ட பாதிப்புகளை தொடர்ந்து, புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் இயக்குநர் சரவணவேல் ராஜ் அவர்களின் உத்தரவின்படி, பேராசிரியர் திருமதி கே.பிரேமலதா தலைமையிலான 8 நபர்களை கொண்ட குழுவினர் கடந்த டிசம்பர் 7,8,9 ஆகிய மூன்று நாட்கள் மலையில் களஆய்வு செய்தனர். அந்த ஆய்வறிக்கையின்படி 350 கிலோ எடை கொண்ட கொப்பரை மற்றும் திரி களையும், முதல்நாள் 40 டின்கள் மூலம் 600 கிலோ நெய்யும், பிற நாட்களில் தேவைக்கேற்ப தீபத்திற்கான நெய்யும், மலை உச்சிக்கு எடுத்து செல்ல தேவைப்படும் மனித சக்தி, காவல் துறை மற்றும் வனத்துறையினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் மலையின் மீது ஏற அனுமதி மறுக்கப்படுகிறது. இதுதொடர்பாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அறிவிப்பை வெளியிடுவார்.

இந்த ஆண்டு தீப திருவிழாவில் 40 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், அதற்கேற்றால்போல் முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் துணை முதலமைச்சர் , பொதுப்பணித்துறை அமைச்சர் மற்றும் நான், தலைமை செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் தலைமையில் 6 ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

கார்த்திகை தீப நாளான்று பொதுப்பணித்துறையின் மூலம் உறுதித் தன்மையை சரிபார்த்து அளிக்கப்பட்ட சான்றின் அடிப்படையில் திருவண்ணாமலை திருக்கோயிலில் பரணி தீபத்திற்கு ஆன்லைனில் விண்ணபித்த 500 பக்தர்கள், கட்டளைதாரர்கள் மற்றும் உபயதாரர்கள், அரசு துறை அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் என 6,500 நபர்களும், அதே போல மாலையில் திருக்கோயில் வளாகத்தில் முக்கிய பிரமுகர்கள், ஆன்லை னில் விண்ணப்பித்த பக்தர்கள், கட்டளைதாரர்கள் மற்றும் உபயதாரர்கள், அரசு துறை அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், காவல் துறையினர் 1,000 நபர்கள் என 11,600 நபர்களும் அனுமதிக்கப்படுவர். இந்த முறை சிறப்பு அனுமதி சீட்டு இல்லாமல் எவரையும் உள்ளே அனுமதிப்பதில்லை. திருக்கோயிலில் 6 இடங்களில் QR கோடுடன் கூடிய நுழைவாயில்கள் அமைக்கப்படுகிறது. இப்படி அனைத்து வகையிலும் பரணி தீபத்தையும், மகா தீபத்தையும் சிறப்போடு நடத்துவதற்கு பல்வேறு வகையில் திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

### கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில்

# துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக் கூட்டம்!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் – மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பங்கேற்பு!

தஞ்சாவூர், டிச. 13 –

கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இளம் பேச்சாளர்களின் கருத்தியல் சொற்போர் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கும்பகோணத்தில் நடைபெற்றது.

மாநகரச் செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் தலைமையில் நடைபெற்ற விழாவில், 3வது பகுதிச் செயலாளர் இரா.கல்யாணசுந்தரம் வரவேற்புரையாற்றினார்.

மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ். வாசுதேவன், எஸ்.இரவிசந்திரன், எம்.சிவானந்தம், டி.செந்தாமரை, மண்டலம் 3ன் தலைவர் ஜெ.மனோகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இளம் பேச்சாளர்கள் கூந்தை குமரவேல் விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு என்ற தலைப்பிலும், திருவாரூர் கனிமொழி மகளிர் முன்னேற்றத்தில் தமிழ்நாடு என்ற தலைப்பிலும் கருத்தியல் சொற்போர் பேசினர்.

தொடர்ந்துகும்பகோணம் மாநகரைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலை மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது.

முன்னதாக கும்பகோணம் பிரசன்னா, தேவி பிரசாத் குழுவினர் வழங்கும், வயலின் ஃபியூசன் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

இந்த விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி தட்சிணா மூர்த்தி மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், மண்டல குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழச்சி முடிவில் மாநகர துணைச் செயலாளர் ப்ரியம் ஜெ.சசிதரன் நன்றியுரையாற்றினார்.



துணை முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட நெசவாளர் அணி சார்பில் நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜபாட்ரங்கதுரை ஏற்பாட்டில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அசைவ உணவு வழங்கப்பட்டு அதனை தொடர்ந்து, மாரண்டஅள்ளி அரசு மருத்துவமனையில் இரத்த தான முகாம் நடைபெற்றது. இம்முகாமினை தர்மபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தொடங்கி வைத்து இரத்த தானம் செய்தவர்களுக்கு பழரசம் மற்றும் உணவுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் அரியப்பன், மாநில விவசாய அணி துணைத் தலைவர் சூடப்பட்டி சுப்ரமணி, மாவட்டப் பொருளாளர் முருகன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்வீடி.கோபால், அன்பழகன், மாரண்டஅள்ளி பேரூராட்சி தலைவர் வெங்கடேசன், கவுன்சிலர் கார்த்திகேயன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.